02. பின்வரும் தேற்றங்களை பெறுகை முறையின் வழியே நிறுவுக.

I. [(P∨Q)∨~P]

II. [P→ (~P→ Q)]

III. [(P∧Q) →((P→(Q∨R))]

IV. [(P→Q) ∨(Q→R)]

(05×4= 20 புள்ளிகள்)

03. உமது சுருக்கத்திட்டத்தினைத் தந்து, பின்வரும் வாதங்களைக் குறியீட்டாக்கம் செய்து, அவற்றின் வாய்ப்பின் தன்மையை உண்மை அட்டவணையின் நேரல் முறை மூலம் துணிக.

I. ராத ஓர் இலங்கைப் பெண்ணுமல்ல ஓர் இந்தியப் பெண்ணுமல்ல. அவள் ஓர் இலங்கைப் பெண் இல்லையெனில் அவள் ஒரு பாக்கிஸ்தானியப் பெண்ணுமல்ல. ஆகவே ராத ஒன்றில் பாகிஸ்தானியப் பெண் அல்லது பங்களாதேஷியப் பெண் ஆவாள்.

II. உடல் மற்றும் உள ரீதியான தண்டனைகள் இரண்டும் ஆளுமைக்கு தீங்கானவையாகும். உளரீதியான தண்டனைகள் ஆளுமைக்கு தீங்கானவை என்றால் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகிய இருவரும் மாணவர்களை விமர்சிக்க முடியாது. ஆகவே ஆசிரியர்கள் மாணவர்களை விமர்சித்தால் காவல்துறை அவர்களைக் கைது செய்ய முடியும்.

III. நாம் சுற்றுச் சூழலைப் பாதுகாத்தாலாயின் ஆயினே நாம் எதிர்காலத் தலைமுறைக்கு உலகத்தைக் காப்பாற்ற முடியும். நாம் எதிர்காலத் தலைமுறைக்கு உலகத்தைக் காப்பாற்ற முடிந்தால் அவர்கள் நம்மை மதிப்பார்கள். ஆகவே அவர்கள் நம்மை மதித்தால் மட்டுமே நாம் சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம்.

IV. பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டில் ஆகிய இருவரும் கருத்துமுதல்வாதிகள் என்பது தவறு. பிளேட்டோ ஒரு கருத்துமுதல்வாதி ஆகவே அரிஸ்டோட்டில் ஒரு கருத்துமுதல்வாதியல்ல.

(05×4= 20 புள்ளிகள்)

04. பின்வரும் வாதங்களை வகுப்புக்களின் அடிப்படையில் குறியீட்டாக்கம் செய்து, வென்வரைப் படத்தின் வழியே அவற்றின் வாய்ப்பினைத் துணிக.

I. எந்த நாயும் பூனை அல்ல. என்னுடைய செல்லப் பிராணி நாய். ஆகவே, என்னுடைய செல்லப் பிராணி பூனை அல்ல

II. சில மெய்யியலாளர்கள் விஞ்ஞானிகள். டேக்கார்ட்ஸ் ஒரு மெய்யியலாளன். ஆகவே, அவர் ஒரு விஞ்ஞானி

III. எல்லா மாணவர்களும் வெளிநாட்டினர். சில வெளிநாட்டினர் ஆண்கள். ஆகவே, சில ஆண்கள் மாணவர்கள்

IV. காகங்கள் மட்டுமே சாமர்த்தியமுள்ளவை.காகங்கள் மட்டுமே தந்திரமானவை. ஆகவே, தந்திரமிக்கவை அனைத்தும் சாமர்த்தியமுள்ளவை

(05×4= 20 புள்ளிகள்)

P.T.O.

05. பின்வருவனவற்றுள் ஏதேனும் **நான்கினைப்** பற்றி சுருக்கக் கருத்துரை தருக.

I. உண்மை அட்டவணையின் நேரல்முறை

II. வகுப்பு நிரப்பி

III. குறியீட்டு அளவையியல்

IV. நிபந்தனை முறைப்பெறுகை

V. எளிய வாக்கியங்கள்

VI. அளவையியலின் வரைவிலக்கணம்

(05×4= 20புள்ளிகள்)

## பகுதி = II

06. (அ) கார்ள் பொப்பரின் வரையறை விதியின் (Demarcation principle) அடிப்படையில் விஞ்ஞானத்தையும் விஞ்ஞானமல்லாததையும் வேறுபடுத்துக.

(10 புள்ளிகள்)

(ஆ) கீழ்த் தரப்பட்டுள்ள துறைகள் அனைத்தையும் இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதப் பண்பியல் என வகைப்படுத்தி தனித்தனியாக எழுதுக.
புவியியல், நாடகம், பொருளியல், உயிர் இரசாயனவியல், உடலியக்கவியல், பிரெஞ்சு, நுண்ணுயிரினவியல், அரசியல் விஞ்ஞானம், வானியல், மரபணுவியல்

(10 புள்ளிகள்)

07. (அ) "அவதானங்களை விட பரிசோதனைகள் அதிக புறவயத் தன்மை சார்ந்த அறிவைத் தருகின்றன". என்ற இக் கூற்றை உதாரணங்கள் தந்து விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றை உதாரணங்கள் தந்து விளக்குக.

I. தீர்ப்புச் சோதனை

II. இலட்சியப் பரிசோதனை

(05×2=10 புள்ளிகள்)

P.T.O.

08. (அ) பிரான்சிஸ் பேக்கனின் தொகுத்தறி முறையின் முக்கிய அம்சங்களை விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஆ) உய்த்தறி வாய்ப்பு பார்த்தல் மற்றும் உய்த்தறி பொய்ப்பித்தல் வாதங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(14 புள்ளிகள்)

09. (அ) சமூக விஞ்ஞானங்களில் பரிசோதனைகள் நடத்த முடியாமைக்கான காரணத்தை கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

(ஆ) சமூக விஞ்ஞானங்களில் புறவயத்தன்மை பற்றிய பிரச்சினையை பரிசீலிக்குக.

(10 புள்ளிகள்)

10.பின்வருவனவற்றுள் ஏதேனும் **நான்கினைப்** பற்றி சுருக்கக் கருத்துரை தருக.

I. கருதுகோள் உய்த்தறிமுறை
II. காரணகாரிய விளக்கம்
III. அளவீட்டின் பயன்பாடு
IV. கொப்பனிகஸின் புரட்சி
V. அனுபவ விஞ்ஞானங்களும் அனுபவமில் விஞ்ஞானங்களும்
VI. விஞ்ஞானமும் சமயமும்

(05×4=20 புள்ளிகள்)

CDCE

UNIVERSITY OF PERADENIYA

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

Bachelor of Arts (External –New Syllabus) Examination 100 Level – 2025

ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්‍ෂණය 100 මට්ටම - 2025

கலைத்தேர்வுப் பரீட்சை (வெளிவாரி–புதிய பாடத்திட்டம்) 100 வது தேர்ச்சி மட்டம் – 2025

## (SUPE 104- LOGIC AND SCIENTIFIC METHOD)

## (SUPE 104- அளவையியலும் விஞ்ஞான முறையும்)

කාලය පැය **(03)** තුනයි.
மூன்று**(03)** மணித்தியாலங்கள்.
Time three **(03)** Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible hand writing.

පළමු කොටසෙන් අඩුම තරමේ ප්‍රශ්න දෙකක් (02) ද
දෙවන කොටසෙන් අඩුම තරමේ ප්‍රශ්න එකක් (01) ද
තෝරාගෙන ප්‍රශ්න **පහකට (05)** පමණක් පිළිතුරු සපයන්න
பகுதி ஒன்றில் குறைந்தது இரண்டு வினாக்களுக்கும் பகுதி இரண்டில் குறைந்தது ஒரு வினாவுமாக மொத்தம் **(05)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
Answer **Five** (05) Questions only, selecting at least **two** (02) from part I and at least **one** (01) from part II.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව **10** කි.
There are **10** questions in the question paper.
இந்த வினாப்பத்திரத்தில் **10** வினாக்கள் உள்ளன.

---

## பகுதி – I

01. உமது சுருக்கத்திட்டத்தினைத் தந்து, பின்வரும் வாதங்களைக் குறியீட்டாக்கம் செய்து, பெறுகை முறையின் வழியே அவற்றின் வாய்ப்பினைக் காட்டுக.

I. அவன் ஒரு ஆசிரியர் எனத்தரப்பட்டால் அவள் ஒரு பாடகி ஆவாள். அவள் ஒரு பாடகி என்பது பொய்யாகும். ஆகவே ஒன்றில் அவன் ஒரு ஆசிரியர் அல்லன் அல்லது அவன் ஒரு நடிகனாவான்.

II. பிளேட்டோ ஒரு மெய்யியலாளனாயின் பிருனோ ஒரு விஞ்ஞானியாவான். பிருனோ ஒரு விஞ்ஞானியாயின் ஷேக்ஸ்பியர் ஒரு கலைஞன் ஆவார். பிளேட்டோ ஒரு மெய்யியலாளன் என்பதுடன் டேவிட்ஹியூம் ஒரு அனுபவவாதியாவார். ஆகவே ஷேக்ஸ்பியர் ஒரு கலைஞன் என்பதுடன் டேவிட் ஹியூம் ஒரு அனுபவவாதியாவார்.

III. மூன்றாம் உலகப் போர் தொடங்கினால் கூட்டணி நாடுகள் போரில் தலையீடு செய்யும் என்பது பொய்யாகும். கூட்டணி நாடுகள் போரில் தலையீடு செய்யும் ஆகவே நாம் போரை நிறுத்த வேண்டும்.

IV. ராமன் சீதையை நேசிப்பானாயின் ஆயினே ராவணன் சீதையை கடத்துவான். ஒன்றில் ராவணன் சீதையை கடத்துவான் அல்லது ராவணன் ராமனைக் கொல்லுவான். ராவணன் ராமனைக் கொல்லுவான் என்பது பொய்யாகும். ஆகவே ராமன் சீதையை நேசிப்பான்.

(05×4= 20புள்ளிகள்)

P.T.O.